# வாக்குவாதம் வரும்போது வசமிழந்து விடாதீர்கள் (15:1-18)

*நான் வாக்குவாதத்தை விரும்புவதில்லை. சூடான வார்த்தைப் பரிமாற்றங்கள் மற்றும் ஓங்கிய குரல்கள் ஆகியவற்றை நான் விரும்புவதில்லை. ஒரு மனிதர் இன்னொரு மனிதருடன் மகிழ்ச்சியற்ற நிலையில் இருப்பதைக் காண என்னால் முடியாது. சில ஆத்துமாக்களிடமிருந்து வருகின்ற வாக்கு வாதத்தின் சிறுமை மற்றும் அழகின்மை ஆகியவற்றினால் நான் புலம்புகின்றவனாகின்றேன். வாக்குவாதமானது என்னைச் சரீரத்தில் சுகவீனனாக்குகின்றது. எது எப்படியிருந்தாலும், வாக்குவாதம் என்பது - தேவனுடைய மக்களின் மத்தியில் கூட - வாழ்க்கையின் ஒரு உண்மையாயிருக்கின்றது (மத். 10:34-36; லூக். 12:51-53; 1 கொரி. 11:18, 19). அப். 15ல் நாம், சபையில் ஏற்பட்ட வாக்குவாதங்களுக்கு மிகச் சிறந்த இரண்டு எடுத்துக்காட்டுகளைக் காண்கின்றோம்: வசனம் 1 முதல் 35 வரையிலும் உபதேசத்தில் கருத்து வேறுபாடு ஒன்றை நாம் காண்கின்றோம்; வசனம் 36 முதல் 41 வரையிலும் அபிப் பிராயத்தில் வேறுபாடு ஒன்றை நாம் காணுகின்றோம். முதலாவது வாக்குவாதமானது சபையார் யாவரும் ஈடுபட்டதாயிருந்தது; இரண்டாவது வாக்குவாதமானது இரண்டு கிறிஸ்தவர்கள் ஈடுபட்டதாயிருந்தது. ''சபையில் நமக்குள் வாக்குவாதம் ஏற்படுமா?'' என்பது கேள்வியல்ல, ஆனால், ''வாக்குவாதம் வருகின்றபோது அதை நாம் எவ்விதம் கையாளுகின்றோம்?'' என்பதே கேள்வியாகும்.*

*நமது முந்திய பாடத்தில் நாம் 15:1-31ல் பற்றியெரியும் பிரச்சனையொன்றைப் பரிசீலனை செய்தோம். இந்தப் பாடத்திலும், இதற்கடுத்தப் பாடத்திலும், பவுலும் மற்றவர்களும் சபையளவிலான இந்த வாக்குவாதத்தை எவ்விதம் கையாண்*

*டார்கள் என்பதை அறிவதற்காக நாம் அதே அடிப்படை வசனப் பகுதிகளுக்கு மறுபடியும் திரும்புவோம். பின்பு, கிறிஸ்தவர்களின் மத்தியில் நிலவும் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளைப் பற்றிப் படிப்பதற்காக, அதிகாரம் 15ன் கடைசி வசனங்களை ஆய்வு செய்வோம்.*

## *இது தானாகவே நீங்கிவிடுமா? (15:1, 2)*

*முரண்பாட்டைக் கண்டு கொள்ளாமல் விடுவது, அல்லது முரண்பாடு உள்ளது என்பதையே மறுப்பது என்பது சிலர் ''முரண்பாட்டைக்'' கையாளும் வழியாக இருக்கின்றது. ஆலோசனையாளர்கள் இதனை "பின்னடைவு அணுகுமுறை" என்று அழைக்கின்றார்கள், மற்றும் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்துபவர் தன்னைக் குறித்தோ அல்லது தன்னுடன் முரண்பாடு கொண்டுள்ளவரைக் குறித்தோ சிறிதளவே மதிப்புடையவராக அல்லது மதிப்பே அளியாதவராகத்தான் இருப்பார் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். இந்த அணுகுமுறையானது மிகவும் அரிதாகவே ஒரு பிரச்சனையைத் தீர்த்து வைக்கின்றது. எருசலேமிலிருந்து கள்ள போதகர்கள் வந்தபொழுது (வ. 1), பவுலும் பர்னபாவும் அந்தப் பிரச்சனை தானாகவே நீங்கி விடும் என்று நம்பி அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விடவில்லை. மாறாக, அவர்கள் அதை விவாதித்தார்கள் (வ. 2). சபையில் உள்ள வாக்குவாதமானது விரைவாகவோ அல்லது தாமதமாகவோ கையாளப்பட வேண்டும்-விரைவாகக் கையாள்வதென்பது தாமதமாகவே கையாள்வதைக் காட்டிலும் எளிதானதாகும்.*

*சிலர் முரண்பாட்டைப் பொறுத்த அளவில் பிரச்சனைகள் உள்ள சபையிலிருந்து பின்னிட்டுச் செல்லுதல் என்ற மித மிஞ்சிய "பின்னடைவு" அணுகுமுறையைக் கைக்கொள்கின் றார்கள். "சபையில் சிலப் பிரச்சனைகள் இருந்ததால்" அநேக ஆண்டுகளுக்கு முன்பு ஆராதனைக்குச் செல்வதை நிறுத்தி விட்ட உறுப்பினர்கள் பலரை நான் அறிந்திருக்கின்றேன். அந்தியோகியாவின் சபையில் இருந்த எவரொருவரும், "சபையார் இப்படிக் குழப்பம் விளைவித்துச் சண்டையிடப் போகின்றார்கள் என்றால், நான் வெளியேறி விடுகின்றேன்" என்று கூறியதற்கான அறிகுறியொன்றையும் நாம் காண்ப*

*தில்லை. சபை ஒன்றில் உள்ள வாக்குவாதத்தைக் கையாள உதவுவதற்கு முன்னர், நம்மில் சிலர், வாக்குவாதத்தைப் பற்றியதான நமது சொந்த நடக்கையைக் கையாள வேண்டியது அவசியமாகும். நம்மில் எவரும் தொல்லைகளை விரும்புவ தில்லை, ஆனால் நமது சபையில் அது காணப்படும்போது, அதைத் தீர்த்து வைக்க நாம் உதவ வேண்டுமேயல்லாமல், அதிலிருந்து ஓடக் கூடாது.*

## இதற்காகப் போராடுவது தகுதியானதா? (15:2)

*சபையின் வாக்குவாதத்தைக் கையாளுவதில் ஒருவர், முதலாவது, கருத்து வேறுபாட்டின் இயல்பைத் தீர்மானிக்க வேண்டும். நாம் (அப். 15ல் இருந்தது போல) உபதேசத்தைப் பற்றிய ஒரு வாக்குவாதத்தைப் பற்றிப் பேசுகின்றோமா? அல்லது நாம் (அப். 6ல் நடந்தது போல) யாரேனும் ஒருவரின் உணர்வுகள் புண்படுத்தப்பட்டது பற்றிப் பேசுகின்றோமா? ஒரு சபையில், உண்மையான உபதேசம் பற்றிய வாக்கு வாதங்கள் வெகுசிலவாகவே மற்றும் நீண்ட காலத்திற்கு ஒரு முறை ஏற்படுவதாகவே உள்ளது என்பது என் அனுபவமாகும், ஆனாலும் எப்போதாவது அவை ஏற்படத்தான் செய்கின்றன. அப்படி ஏற்படுகின்ற போது, யூதாவின் அறிவுரை ஏற்புடை யதாகும்: "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப் பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும்" (யூதா 3). இந்தக் காரணத்திற்காகவே கள்ள போதகர்களுக்கும், "பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானது" (அப். 15:2).*

*ஆயினும், நான் கண்டுள்ள சபை சார்ந்த வாக்குவாதங்கள் பலவற்றில், கொள்கைகளைக் காட்டிலும் ஆளுமைத் தன் மைகளே அதிகம் இடம் பெற்றிருந்தன. சிலவேளைகளில், ஒரு செயல்பாட்டை எவ்விதம் செய்வது என்பது பற்றி கருத்து வேறுபாடு இருந்தது. சில வேளைகளில் சிலர் தாங்கள் தவறாக நடத்தப்பட்டதாக (சரியாகவோ அல்லது தவறாகவோ) நினைத்தனர். அநேக நிகழ்ச்சிகளில், விஷயமானது ஆவிக்குரிய முறையில் கையாளப்பட்டால், வெகு சிலரே அதில் ஈடுபட்டார்கள்; ஆனால் வாதம் செய்தவர்கள் தங்கள்*

*பக்கங்களில் மக்களை வரிசைப் படுத்தியதன் விளைவாக சபை முழுவதற்குமான அளவில் வாக்குவாதங்கள் உண்டாயின. சபை சார்ந்த திட்டமிட்ட நடவடிக்கைகளில் தேவபக்தியற்று ஈடுபடுபவர்கள், தேவன் வெறுக்கின்ற நபர்களின் பட்டியலில் "சகோதரருக்குள் விரோதத்தை உண்டு பண்ணுபவர்கள்" (நீதி. 6:16, 19)*[1] *முதலிடத்தில் இருக்கின்றார்கள் என்பதை நினைவு கூர வேண்டியது அவசியமாகும்.*

*அவசியமான உபதேசக் கொள்கை யொன்றைப் பற்றியதா யிருந்தால், பவுலின் எடுத்துக்காட்டை நாம் பின்பற்றி, "சுவிசேஷத்தின் சத்தியம் ... நிலைத்திருக்கும்படி ... ஒரு நாழிகையாகிலும் ... கீழ்ப்படிந்து இணங்கக் கூடாது" (கலா. 2:5). இதற்கு மாறாக, உணர்வுகள் புண்படுதல் அல்லது கருத்து வேறுபாடு ஆகியவை பற்றிய முரண்பாடு இருந்தால், "சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக் கடவோம்" (ரோமர் 14:19). புண்பட்ட நமது சுயத்தை மறந்து, மற்றவர் களின் ஞானத்திற்குச் செவிசாய்க்க நாம் ஆயத்தமாவோம். சபைக்காக இயேசு மரித்தார் (அப். 20:28), அந்த சபையின் சமாதானமும், ஒத்திசைவும் நமது உணர்வுகள் மற்றும் கருத்துக்களைக் காட்டிலும் அதிகம் முக்கியமானவைகளாகும்.*

## *உதவியை நாடுவது சரியா? (15:2)*

*அந்தியோகியாவின் சபையில் வாக்குவாதம் எழுந்தபோது, "அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரி டத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போக வேண்டுமென்று தீர்மானித்தார்கள்" (வ. 2). இது வேதாகமக் கொள்கை யென்றும், ஏவப்பட்ட மனிதர்களும் (அப்போஸ்தலர்களும்) ஈடுபட வேண்டியதாயிருந்த ஒரு விசேஷித்த சூழ்நிலையா யிருந்தது என்று நான் உணர்கின்றேன். ஏனென்றால், அந்தியோகியாவிலிருந்த சகோதரர்கள் எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களுடன் விஷயத்தைப் பரிசீலனை செய்து சரி பார்த்துக் கொண்ட செயலானது, நாம் பிரச்சனை எழும்போது புதிய ஏற்பாட்டைக் கொண்டு பரிசீலனை செய்து சரிபார்த்துக் கொள்வதற்குச் சமமானதாகும். இருப்பினும், வேதவசனத்தின்*

*பொதுக் கொள்கையிலிருந்து விலக்கி, அதை நாம் தவறாகப் பயன்படுத்துவதில்லை என்றே எண்ணுகின்றேன். ஒவ்வொரு பிராந்திய சபையும் சுயாட்சியுள்ளது (தன்னாட்சி பெற்றது) என்றாலும், ஒரு பிரச்சனையைத் தீர்த்து வைக்க சில வேளை களில் அனுபவமுள்ள முன்னோடிகள் சிலரை அழைப்பது என்பது அனுமதிக்கப்பட்டதும், விவேகமானதுமாய் இருக்கின்றது.*

*வழக்கமாக, இவ்விதமாக முரண்பட்டவர்கள் தாங்கள் மிகவும் மதிக்கும் முடிவுகளைத் தரும் தேவமனிதரிடத்தில் ஆலோசனை கேட்பது என்பது மறைமுகமாய்ச் செய்யப் படுகின்றது. ஆஸ்திரேலியாவில் நானும் எனது சகோதரர் காய் ரோப்பரும் எங்களைக் காண வந்த ஒரு சகோதரரிடத்தில் எங்கள் இருதயங்களை ஊற்றி விட்டு நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டது எனக்கு நினைவில் இருக்கின்றது. ஆயினும் அவ்வப்போது, நேரடியான உதவியும் நாடப்படுகின்றது. உள்ளூர் சபையின் கூட்டங்களில் அப்பகுதியிலிருக்கும் மரியாதைக்குரிய சகோதரர்கள் எதிரெதிர்க் கருத்துக்களுக்கிடையே மத்தியஸ்தம் பண்ணும்படி கேட்கப் படுவதை நான் கண்டிருக்கின்றேன். பார்வையிட வரும் அந்த சகோதரர்கள் சபைகளுக்கான முடிவெடுக்கும் அதிகாரம் பெறுவதில்லை, ஆனால் சூழ் நிலையை அவர்கள் வாக்குவாதத்தில் சிக்கியுள்ளவர்களைக் காட்டிலும் அதிக தெளிவாகக் காண முடியும்.*

*வெளியிலிருந்து எப்பொழுது உதவிக்கு அழைப்பது, எப்பொழுது அழைக்காமலிருப்பது என்பதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல முடியாது. உங்களால் முடிந்தவற்றைச் செய்தும், சபைப் பிரச்சனையானது தீர்வு காணப்படாமல் இருந்தால், மற்றவர்களிடத்தில் உதவிபெற கேட்பதற்குக் கௌரவம் பார்க்காதிருங்கள் என்று மட்டுமே நான் வலியுறுத்துகின்றேன்.*

*அப். 15ன் நிகழ்ச்சிகளானது, சபை விஷயங்களைத் தீர்மானிக்க சபையில் உபரி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட வில்லை என்பதை இவ்விடத்தில் வலியுறுத்துவது தகுதியான தாகும். நாமகரணக் கூட்டங்கள் தங்களின் சபை சார்ந்த மாநாடுகள் மற்றும் கூட்டங்கள் ஆகியவற்றை நியாயப்படுத் துவதற்கு அப். 15 ஐப் பயன்படுத்துகின்றார்கள். கத்தோலிக்க*

சபையானது, எருசலேமில் நடந்த இந்தக் கூட்டத்தை “முதல் கிறிஸ்தவ உலக மாநாடு” என்று அழைக்கின்றது. ஆயினும், அப். 15ல் உள்ள சூழ்நிலையானது, அநேக சபைகள் தங்கள் பிரதிநிதிகளை சபை விஷயங்கள் குறித்து வாக்குப் போடுவதற்காக மாநாட்டிற்கு அனுப்பி வைக்கவில்லை என்பதைத் தெளிவாய்க் காட்டுகின்றது. மாறாக, ஒரு சபையிலிருந்து மனிதர்கள் இன்னொரு சபைக்குச் சென்றார்கள். நாமகரணக் கூட்ட எழுத்தாளர்கள் Warren W. Wiersbe மற்றும் F.W. Farrar கூட இது சபையின் உபரிக் கூட்டமோ அல்லது மாநாடோ அல்ல என்பதைப் புரிந்து கொண்டுள்ளார்கள்.

> அந்தக் கூட்டமானது நாமகரணக் கூட்டத்தார் அழைப்பது போன்ற ஒரு ‘‘சபையின் மாநாடு’’ அல்ல ... ஒவ்வொரு பிராந்திய சபையும் சுய ஆளுகை அமைப்புடையதாய் இருந்தது.

> எருசலேமில் நடந்த இந்த கூட்டமானது, சபை வரலாறு, அதன் ஆளுகை அமைப்பு அல்லது கருத்துப் பொருள் ஆகிய எவற்றிலும் சபையின் பொதுக் கூட்டம் என்பதாகப் பிரதிபலிக்கப்படுவதில்லை. அபிஷேகிக்கப்பட்ட பிரதிநிதிகளின் மதரீதியான கூட்டமாக இல்லாமல், அது அந்தியோகியா சபையின் பிரதிநிதிகளை ஏற்றுப் பேசிய எருசலேம் சபையார் யாவரின் ஒரு கூட்டமாகவே இருந்தது.

## எனது தற்பெருமையை விழுங்கப் போதுமான அளவுக்கு நான் பெரியவனா? (15:2, 3)

தற்பெருமை பற்றிய விஷயத்தை நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன், ஆனால் இந்த அறிவுரை மறுபடியும் கூறத் தகுதியானதேயாகும்: தேவைப்பட்டால் உங்கள் தற்பெருமையை விழுங்குமளவு பெரியவர்களாயிருங்கள். இதை அப்படியே செய்ய விருப்பமாயிருந்த ஒருவரின் முழு நிறைவான விளக்கவுருவை இவ்விடத்தில் நாம் காண்கின்றோம். அந்தியோகியாவில் இருந்த சபையார் இப்பிரச்சனை குறித்து முன்னோடிகள் என்ன நினைத்தார்கள் என்று அறிய எருசலேமுக்கு ஆட்களை அனுப்பத் தீர்மானித்த செயலானது

(வ. 2) பவுலின் முகத்தில் அறைவது போன்றதாயிருந்தது. இக்கருத்தைப் பற்றிப் பேசுவதற்கு அவர் எருசலேமில் இருந்த அப்போஸ்தலர்களைப் போலவே தகுதியுடையவராயிருந்தார். பிற்பாடு அவர், தாம் எருசலேம் சென்ற போது வேதாகம சத்தியத்தில் தமது புரிந்து கொள்ளுதலுக்கு, அங்கிருந்த எவரும் எதையும் பங்களிக்கவில்லை என்பதை வலியுறுத்தினார் (கலா. 1:17; 2:6). பின்பு ஏன் பவுல் எருசலேமுக்குச் செல்லச் சம்மதித்தார்? கலாத்தியர் 2:2ல் அவர் "நான் தேவ அறிவிப் பினாலே போய்" என்று குறிப்பிட்டார். தேவன் ஏதோ ஒரு வகையில் அந்த அப்போஸ்தலரிடத்தில், அந்தியோகியாவின் சகோதரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் எருசலேம் செல்ல வேண்டியது ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதற்கு அவசியமாகும் என்றார் - பவுலும் அதைச் செய்தார் (அப். 15:3). இவ்வித செயலைப் பெரிய மனிதர்களால்தான் செய்ய முடியும். நீதிமொழிகள் 16:18ல் "அழிவுக்கு முன்னானது அகந்தை" என்று கூறப்படுகின்றது. அகந்தையின் விளைவாகச் சபை அழிவது என்பது மிகவும் அடிக்கடி நடக்கக் கூடியதாகும். உங்கள் அகந்தையை விழுங்கப் போதுமான அளவுக்குப் பெரியவர்களாயிருங்கள்.

## இதைப் பற்றிப் பேசுவதற்கு நான் விரும்புகின்றேனா? (15:3-5)

முரண்பாட்டைப் பொறுத்தமட்டில் "பின்னடைவு அணுகுமுறையை"ச் சார்ந்திருப்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு இங்குள்ளது: "நான் இதைப் பற்றிப் பேச விரும்ப வில்லை!" ஆனால் பவுல் மற்றும் பர்னபாவைப் பொறுத்த மட்டில் இது உண்மையாயிருந்ததில்லை.

> *அந்தப்படி அவர்கள் சபையாரால் வழிவிட்டனுப்பப்பட்டு, பெனிக்கே சமாரியா நாடுகளின் வழியாகப் போய், புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள்.[2] அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும் அப்போஸ்தல ராலும் மூப்பராலும்[3] ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார் கள் (வ. 3, 4).*

*பவுலும் பர்னபாவும் தங்களின் ஊழியம் பற்றிக் கூறுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு பொதுக் கூட்டமாகவே இது இருந்தது என்பது தெளிவாகும் - இக்கூட்டத்தின்போது யூதமத போதகர் களும் கூடப் பேசுவதற்கு அனுமதியளிக்கப்பட்டார்கள் (வ. 5).*

*இந்தப் பிரச்சனையைப் பற்றிப் பேசுவதற்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பவுலும் பர்னபாவும் பயன்படுத்திக் கொண்டார்கள். கலாத்தியர் 2 ஆனது அப். 15ன் அதே நிகழ்ச்சி யைக் கூறுவதானால், வசனம் 5ல் காணப்படும் பொதுக் கூட்டத்திற்கும், வசனம் 6 முதல் 29 வரை விளக்கப்படும் பொதுக் கூட்டத்திற்கும் இடையில் பவுலும் பர்னபாவும் எருசலேமில் இருந்த சபையின் முன்னோடிகளைத் தனிமையில் சந்தித்திருக்க வேண்டும். இந்த விஷயங்கள் பற்றி அவர்களி டத்தில் தாராளமாய்ப் பேசியபோது, அவர்கள் (உபதேச விஷயங்கள் பற்றி ஆவிக்குரிய மனிதர்கள் விவாதிப்பதை நாம் எதிர்பார்ப்பது போலவே) கருத்து ஒருமித்திருந்ததைக் கண் டார்கள். பின்பு, “... யாக்கோபும், கேபாவும், யோவானும் ... அந்நியோந்திய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் [பவுலுக்கும்] பர்னபாவுக்கும் வலது கை கொடுத்து” (கலா. 2:9). பவுலும் பர்னபாவும் இப்பிரச்சனை பற்றி பேச மனதுள்ளவர் களாய் இருந்தபடியினால் - அவர்களால் சபையில் சமா தானத்தை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவர முடிந்தது.*

*கலந்துரையாடல் மூலமாக எல்லா விஷயங்களையும் தீர்வுக்குக் கொண்டு வர முடியாது, ஆனால் ஒன்று நிச்சயம்: இருபுறங்களிலும் உள்ளவர்கள் தங்களின் மாறுபட்ட கண்ணோட்டங்களை கலந்துரையாட மனதில்லாமல் இருந்தால் எந்த ஒரு விஷயத்திற்கும் தீர்வு காண முடியாது. ஒரு சகோதரருடன் உங்களுக்குக் கருத்து வேறுபாடு ஏற்படும் போது, அவருடன் முகமுகமாய் அமர்ந்து உங்களின் மாறு பாடுகளை கலந்துரையாட தைரியம் உள்ளவர்களாய் இருங்கள்.*

## கவனிப்பதற்கு நான் கற்றுக் கொண்டுள்ளேனா? (15:6, 7)

*இந்த வாக்குவாதத்திற்குத் திருப்திகரமான ஒரு முடிவைக்*

காண்பதற்காக இரண்டாவது பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது: ''அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள்'' (வ. 6). இதன் பிற்பகுதியில் நாம், ''சபையாரெல்லாரும்'' அங்கிருந்ததாக அறிகின்றோம் (வ. 22; வ. 12 ஐயும் கவனிக்க வும்). வசனம் 7ல், "மிகுந்த தர்க்கம் உண்டானபோது பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி ...'' என்று கூறப்படுகின்றது. "மிகுந்த தர்க்கம் உண்டானபோது ..." என்ற வார்த்தைகளை அவசரமாகப் படித்துச் செல்லாதீர்கள். (வசனம் 2ல் "வாக்குவாதம்" என்றுள்ள வார்த்தையானது கிரேக்க மொழியி லும் வாக்குவாதம் என்று பொருள்படும் வார்த்தையிலிருந்தே மொழிபெயர்க்கப்பட்டதாகும். பேச்சுக்கள் சூடேறியது; கூட்டமானது கூச்சல் மிகுந்ததாய் இருந்தது!) பேதுரு, பவுல், பர்னபா மற்றும் யாக்கோபு ஆகியோரின் முறைப்படியான உரைகளுக்கு முன்பாக ஒவ்வொருவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகும். நம்முடன் ஒத்துப் போகாதவர்களை அடக்குவதன் மூலம் ஒத்திசைவை ஏற்படுத்த முடியாது. ஒவ்வொருவரின் இருதயத்திலும் இருப்பதை அவரவர் வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும் - இது பின்வரும் புரிந்து கொள்ளுதலுடன் இருக்க வேண்டும்: *"ஒவ்வொரு மனிதரும் தன் நிலையைக் கூறுகின்றார்; ஒருவரும் தம் வழியைப் பெற்றிரார்."*

பின்வரும் அறிவுரையை நாம் கவனத்தில் கொள்வோம்: மற்றவர்கள் பேசுகையில் நாம் கவனித்துக் கேட்க வேண்டும். "காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு, அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும்" (நீதி. 18:13) என்று ஞானி கூறினார். மற்றவர்கள் பேசும்போது, அதைக் கேட்பதற்குப் பதில் பெரும்பாலும் நாம் அடுத்து என்ன கூற வேண்டும் என்பதையே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். கவனிப்ப தற்கு, உண்மையிலேயே கவனிப்பதற்குக் கற்றுக் கொள்ளுங் கள். உங்கள் காதுகளினால் மட்டுமல்லாது, உங்கள் இருதயத் தினாலும் கேளுங்கள். குழந்தைகள் சில வேளைகளில் பட்டாணியின் சுவை பிடிக்காததினால் துப்புகின்றார்கள், ஆனால் சிலவேளைகளில் மகிழ்ச்சியில்லாமையை வெளிப் படுத்துவதற்காகவும் பட்டாணியை துப்புகின்றார்கள் என்று மனவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். வளர்ந்தவர்கள்

*இதைக் காட்டிலும் அதிகமாய் மாறுபடுவதில்லை. பகுத்தறியும் காதுடன் நீங்கள் கவனித்துக் கேட்டால் விவாதிக்கும் "விஷயம்" அல்ல, முற்றிலும் வேறொரு விஷயமே பிரச்சனை யாயிருக்கிறது என்பதை நீங்கள் கண்டறிவீர்கள்.*

## *மக்கள் மீதல்லாமல் விஷயங்கள் மீது நான் கவனம் செலுத்துகின்றேனா? (15:7-11)*

*ஒவ்வொருவரும் தம் கருத்தை வெளிப்படுத்திய பிறகு, பேதுரு எழுந்து நின்று பேசத் தொடங்கினார் (வ. 7). நமது முந்திய பாடத்தில் அவருடைய உரையை நாம் படித்திருப்ப தால், அதை இங்கு நான் மறுபடியும் எடுத்துரைக்கப் போவதில்லை - ஆனால் அதை வாசிப்பதற்குச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள் (வ. 7-11). அந்தியோகியாவுக்குச் சென்ற கலகக்காரர்களை எத்தனை முறை பேதுரு இவ்வுரை யில் குறிப்பிட்டார்? "பூஜ்யம் முறைகள்" என்பதே இதற்குப் பதில் ஆகும். பவுல், பர்னபா மற்றும் யாக்கோபு ஆகியோரின் உரைகளைச் சற்றுக் கவனியுங்கள் (வ. 12-29). இவர்கள் யூதமத போதகர்களை எத்தனை முறை குறிப்பிட்டார்கள்? அந்தியோ கியா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தில், "... சிலர் எங்களிடத்தி லிருந்து புறப்பட்டு ... உங்களைக் கலக்கி ..." (வ. 24) என்று குறிப்பிடப்பட்டது, ஆனால் எந்த ஒரு தனிநபரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. பேதுரு, பவுல், பர்னபா மற்றும் யாக்கோபு ஆகியோர் தனிநபர்கள் மீது அல்ல, விஷயங்களின் மீதே கவனம் செலுத்தினார்கள். எனது அனுபவத்தில், பெயர் சொல்லி அழைப்பது என்பது மிகவும் அரிதாகவே நன்மையை விளைவிக்கின்றது[4] மற்றும் அது பெரும்பாலும் பெரும் துன்பத்தை விளைவிக்கின்றது. இது விஷயத்திலிருந்து பாதைமாறச் செய்து, லூக்கா 16ல் உள்ளது போன்ற கடந்து செல்ல முடியாத பெரும் பிளப்பு போன்ற வளைகுடாக்களை உண்டாக்கி விடுகின்றது. நமது வேதபாடப் பகுதியில் இருந்து இதைக் கற்றுக் கொள்ளுங்கள்: நபர்த்துவங்களையல்ல, கொள்கைகளைப் பற்றி கலந்துரையாடுங்கள்.*

## *புத்தகத்துடன் நான் ஒட்டி நிலைத்திருக்கின்றேனா? (15:12-18)*

*பேதுருவின் உரையானது கூட்டத்தாரை அமைதிப் படுத்தியது. பிறகு பர்னபாவும், பவுலும் தங்களின் ஊழியப் பயணத்தைப் பற்றிக் கூறினார்கள். எருசலேமில் பர்னபா மிகவும் மதிக்கப்பட்டதால் அவரின் பெயரை முதலில் குறிப்பிட்டார். ஆனால் அவர்களின் வார்த்தையை லூக்கா பதிவு செய்யவில்லை, ஏனென்றால் அவ்விபரங்களை அவர் அதிகாரம் 13 மற்றும் 14ல் ஏற்கனவே கொடுத்திருந்தார். பவுலும் பர்னபாவும் "தங்களைக்கொண்டு தேவன் புறஜாதி களுக்குள்ளே செய்த ... யாவையும்" விவரித்துச் சொன்னார்கள். ஆயினும் இந்த முறை "தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் ..." (வ. 12) ஆகியவற்றை வலியுறுத்தினார்கள். தேவன் அவர்களோடு இருந்தார் என்பதற்கு இந்த அற்புதங்கள் நிரூபணங்களாயிருந்தன (எபி. 2:4) மற்றும், புறஜாதிகளுக்கான அவர்களின் ஊழியம் தேவனால் அங்கிகரிக்கப்பட்டது.*

*அவர்கள் பேசிய பிறகு, யாக்கோபின் முறை வந்தது-இந்த யாக்கோபு, கர்த்தரின் அரை சகோதரர் ஆவார்.[5] கூறப்பட்டிருந்தவைகளை முதலில், மறுபடியும் ஒரு கண்ணோக்கம் கொடுத்தார்: "சகோதரரே எனக்குச் செவி கொடுங்கள். தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல் முதல் அவர்களுக்குக் கடாட்சித் தருளின விதத்தைச் சிமியோன் (பேதுருவின் எபிரெயப் பெயர்) விவரித்துச் சொன்னாரே" (வ. 13, 14). அவரது சொல்லாக்கமானது அநேகரை அதிர்ச்சியடையச் செய்திருக்கும். யூதர்கள் எப்பொழுதுமே "தேவனுடைய நாமம் தரிக்கப்பட்ட மக்களாய்" இருந்தார்கள் - இது புறஜாதியாரிலிருந்து மாறுபட்ட நிலையாகும். இப்பொழுதோ, "தேவன் தமது நாமத்திற்காகப் புறஜாதிகளில் இருந்து ஒரு ஜனத்தைத் தெரிந்து கொண்டார்!"*

*பிறகு யாக்கோபு, தீர்க்கதரிசனத்தின் ஒரு நிறைவேற்றமாகவே கொர்நேலியு மற்றும் அவர் வீட்டாரின் மனமாற்றம் நடைபெற்றது என்று காண்பிக்க தேவனுடைய வசனத்திற்குத் திரும்பினார். "அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும்*

ஒத்திருக்கிறது" (வ. 15), அவர் ஆமோஸ் 9:11, 12ல் இருந்து (வ. 16-18)[6] மேற்கோள்காட்டி இதைக் கூறினார். சபையில் வாக்குவாதம் எழுகின்றபோது, நாம் புத்தகத்துடன் அதிக நெருக்கமாய் இருக்க வேண்டும். கருத்து வேறுபாடு உபதேசத்தின்படியானதல்ல என்றாலும், வேதாகமத்தில் கொடுத்துள்ள கொள்கைகள் பிரச்சனையைத் தீர்க்க உதவும் என்பதோடு, தேவனுடைய சித்தத்தின் மையத்தில் நாம் இருப்பதை அது உறுதிப்படுத்தும்.


## முடிவுரை

இப்பாடத்தின் தொடக்கத்தில், வாக்குவாதம் பற்றிய எனது சொந்த விருப்பமின்மையை நான் அறிக்கையிட்டேன். இப்பாடத்தை நாம் முடிக்கையில், நான் உங்களைக் கேட்கின்றேன்: வாக்குவாதம் பற்றி நீங்கள் எவ்விதம் உணருகின்றீர்கள்? சகோதரர்களே ஒத்துப் போகாதபோது நீங்கள் எவ்விதம் பதில்செயல் செய்கின்றீர்கள்? நீங்கள் வசமிழந்து விடுகின்றீர்களா? நீங்கள் துண்டு துண்டாய்ச் சிதறி விடுகின்றீர்களா? நீங்கள் விட்டுவிட விரும்புகின்றீர்களா? இதைத் தவிர நாம் ஒன்றும் சாதிக்காதிருந்தால், இந்தப்பாடத்திலும், அடுத்த பாடத்திலும், வாக்குவாதமானது தேவனுடைய உதவியுடன் கையாளப்பட்டு - அவர் நாமத்திற்கு மகிமை உண்டாகும் வகையிலேயே கையாளப்படுவதை நாம் காண *முடியும்* என்று நம்புகின்றேன்.


## காட்சி-உதவிக் குறிப்புகள்

அப். 15ல் நடைபெற்ற கூட்டமானது நாமகரண ஆலோசனைக்கூட்டமோ அல்லது மாநாடோ அல்ல என்பதை வலியுறுத்துவதற்கு நேரம் எடுத்துக் கொள்ள நீங்கள் விரும்பக் கூடும். நாமகரணக் கூட்டங்களின் மாநாட்டை விளக்கும் பின்வரும் வரைபடத்தைக் கரும்பலகை, பெரிய வரைபடத் தாள் அல்லது ஓவர்ஹெட் புரொஜெக்டர் ஃபிலிம் இவற்றில் நீங்கள் வரைந்து காண்பிக்கலாம்.

மேல் கண்டதற்கு மாறாக, அப். 15ன் கூட்டமானது




(1) ஏவப்படாத மனிதர்கள், (2) பிரதிநிதிகள், மற்றும் (3) கருத்துப் பற்றிய விஷயங்கள் ஆகியவற்றை உள்ளடக்காமல், (1) ஏவப்பட்ட மனிதர்கள், (2) "முழு சபை", மற்றும் (3) இரட்சிப்பின் விஷயம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. பின்வரும் வரைபடமானது, அப். 15ல் ஒரு சபையானது ஒரு கேள்வியுடன் சில மனிதர்களை ஏவப்பட்ட மனிதர்கள் இருந்த ஒரு சபைக்கு அனுப்பியது என்பதைக் குறிக்கின்றது.




**குறிப்பு:** இவ்வரைபடங்களில் "ச" என்பது சபையையும், "பி" என்பது பிரதிநிதிகளையும் குறிக்கும். கத்தோலிக்க சபையின் ஆலோசனைக் கூட்டங்களையும், எருசலேம் கூட்டத்தையும் வேறுபடுத்திக் காட்ட இவ்வரைபடங்களைப் பயன் படுத்தலாம்.

## பிரசங்கக் குறிப்புகள்

வசனம் 6 முதல் 29 முடிய உள்ள பொதுக் கூட்டமானது பின்வருமாறு புறக்குறிப்பிடப்பட முடியும்: (1) பேதுருவின் விவாதம் (வ. 7-11), (2) பர்னபா மற்றும் பவுல் ஆகியோரின் அறிக்கை (வ. 12), மற்றும் (3) யாக்கோபின் பரிந்துரை (வ. 13-29).

குறிப்புகள்

[1]நாம் "தேவன் பாவத்தை வெறுக்கின்றார், ஆனால் பாவியை வெறுப்பதில்லை" என்று வழக்கமாகக் கூறுகின்றோம். இந்த விஷயத்தில், வசனமானது ஆங்கிலத்தில் "who spreads strife among brothers" என்றுள்ளது (அதாவது விரோதத்தை உண்டு பண்ணும் *தனி நபரை* தேவன் வெறுக்கிறார் என்றுள்ளது) ஆனால் தமிழில் "சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்" என்றுதான் உள்ளது (அதாவது அச்செயலையே தேவன் வெறுக்கின்றார் என்றுள்ளது). ஆவிக்குரிய வகையில் கலக மூட்டுவதென்பது மிக வருத்தத்திற்குரிய ஒரு பாவமாகும். [2]எருசலேமில் இருந்த சகோதரர்களைப் போல, சமாரியா, பெனிக்கே நாடுகளில் இருந்த சகோதரர்கள் புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களானவர்கள்மேல் தப்பெண்ணம் கொண்டிருக்கவில்லை. இந்தப் பகுதியில் இருந்த சபைகள் கிரேக்க யூத கிறிஸ்தவர்களின் நற்செய்தி ஊழிய முயற்சிகளின் விளைவாக ஏற்பட்டவையாகும் (8:5-25; 11:19). [3]எருசலேம் சபையில் தலைமைத்துவமானது (வழி நடத்துதலானது) அப்போஸ்தலர்கள் என்ற தற்காலிக ஏற்பாட்டிலிருந்து மூப்பர்கள் என்ற நிரந்தர ஏற்பாட்டிற்கு மாறிக் கொண்டிருந்ததைக் கவனியுங்கள். அப். 15ல் முடிவெடுக்கும் செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும் மூப்பர்கள் ஈடுபட்டார்கள் (வ. 2, 4, 6, 22, 23). [4]சிலவேளைகளில், ஏவப்பட்ட எழுத்தாளர்கள் எதிராளிகளைப் பெயர் சொல்லிக் குறிப்பிடுவதால் (1 தீமோ. 1:20; 3 யோவா. 9 முதலியன), கள்ள போதகர்களின் பெயரைக் குறிப்பிடும் சாத்தியக் கூற்றினை நாம் முற்றிலுமாகத் தவிர்த்து விடமுடியாது. ஆயினும் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அவ்வாறு செய்ய வேண்டிய சரியான வேளையைப் *பரிசுத்த ஆவியானவர்* கூறுகின்றார். நான் ஏவப்பட்டிராதபடியால், பெயர் சொல்லி அழைக்கும் செயலில் இருந்து விலகியிருப்பதையே விரும்புகின்றேன். [5]அப். 12:17; 21:18; 1 கொரி. 15:7; கலா. 1:19; 2:12; யாக். 1:1. [6]ஏசாயா 2:2-4; 49:6; மற்றும் மீகா 4:1-4 போன்ற தீர்க்கதரிசனங்களை யாக்கோபு மேற்கோள் காட்டியிருக்கக் கூடும் (லூக்கா இவைகளின் சுருக்கத்தையே பதிவு செய்துள்ளார்).